# மாலதி

## தேவன்



www.tamizhthenee.blogspot.com

அத்தியாயம்-1

ஸென்ட்ரல் ஸ்டேஷன். சரியாக ஒன்பது மணி. பங்களூர் மெயிலைப் பிடித்துக்கொண்டு பிளாட்பாரத்தில் நின்ற மகாஜனங்கள் தங்கள் கைகளை எடுத்தார்கள். அதற்காகவே காத்துக் கொண்டிருந்ததுபோல், அந்த வண்டித் தொடர் நகர்ந்தது. இதுவரை பிளாட்பாரத்தையே பார்த் துக்கொண்டிருந்த சந்துரு, ஒரு பெருமூச்சுடன் திரும்பி உட்கார்ந்துகொண்டான். அவன் பிறந்து 23 வருஷத்தில் - ஏழு வருஷம் பத்திரிகாலயம் ஒன்றில் உத்தியோகம் செய்த பிறகு - இப்போது தான் விச்ராந்தியாயிருக்க அவனுக்கு ஒரு வார அவகாசம் கிடைத்தது.
அவன் கண்கள் எதிரிலிருந்த ஒரு நாரீமணியின் மீது சற்றுத் தயங்கி நின்றன. பூர்ண சந்திரனுக்கு ஒப்பான அந்த வதனம் அவனை அந்த க்ஷணமே கொள்ளை கொண்டுவிட்டது!
அம்மெல்லியலாள் தன் விசாலமான நயனங் களை அவன் மீது வீசினாள். சந்துரு தலையைக் குனிந்துகொண்டான். ஆனாலும் அவனையும் மீறிப் பலமுறை அவன் திருஷ்டி அவளை நோக் கியே திரும்பிற்று. அவளுடைய வசீகரமான தேகக் கட்டு அவனை ஆகர்ஷித்தது. அவள் காலடியில்

'மாலதி, பி.ஏ.' என்ற பெயருடன் கிடந்த ஸூட்கேஸையும் நோக்கினான். 'மாலதி... மாலதி! என்ன அழகான பெயர்! எவ்வளவு பொருத்தம்!' என்று எண்ணினான். அவன் எத்தனையோ கதைகளில் வர்ணித்திருக்கும் கதாநாயகிகள் இந்தச் சௌந்தர்யத்தை எட்டிப் பிடித்திருப்பார்களா என்று அவன் சிந்தனை ஓடியது.
மின்னல் கொடி போல் தோன்றி மறையப் போகிறாள் இந்த வனிதை. பின்பு அவளை ஆயுளில் சந்திப்பானோ? அவன் மனதில் ஒரு வேதனை புகுந்துகொண்டது. சந்துருவின் கனவையும் அவளே கைப்பற்றிக்கொண்டாள்!
விடியற்காலை ஐந்தரை மணி. பங்களூர் ஸ்டேஷன் வந்துவிட்டது. திடுக்கிட்டு விழித்தான் சந்துரு. வண்டியிலிருந்து எல்லாரும் இறங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த ரூபவதி இருந்த இடத்தை அவசரமாகப் பார்த்தான். அது காலியாக இருந்தது. இருதயத்தில் ஏக்கத்துடன் இறங்கினான். ஆனால், வெகு விரைவில் அவளை அவன் சற்றும் எதிர்பாராத இடத்தில் சந்திக்க நேரும் என்பதை அவன் அப்போது எப்படி அறிவான்?

## அத்தியாயம் 2

பங்களூரில் தமது பங்களாவின் முன் ஹாலில் காமேசுவர அய்யர் ஒரு ஈஸி சேரில் சாய்ந்து, எதிரில் நாற்காலியில் இருந்த மிஸ்டர் சேகரனுடன் பேசிக்கொண்டிருந்தார்.



"மிஸ்டர் சேகரன்! உங்களை நான் தந்தியடித்துத் தருவித்ததற்குக் காரணம் சொல்லி விடுகிறேன். நம் வீட்டில் இரண்டு நாளாக யாரோ எதையோ கவர்ந்து செல்ல முயற்சிக்கிறான் என்று எனக்கு ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இதுவரை ஒன்றும் காணாமல் போகவில்லை. போலீஸில் இருக்கும் நம் சேகரன் இந்தச் சமயம் கூட

இருந்தால் உதவியாக இருக்குமே என்று நினைத்தேன். உடனே..."
இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தபோதுதான் சந்துரு வந்து தனது 'விஸிட்டிங் கார்டை' அவரிடம் நீட்டினான்.
காமேசுவரய்யர் அதைப் பார்த்ததுமே, "வாருங்கள், மிஸ்டர் சந்திரன்! ரொம்ப சந்தோஷம்! உங்களை நேரில் பார்த்ததில்லை. ஆனால், உங்கள் கதைகளை என் தமையனார் பெண் முன்பெல்லாம் அடிக்கடி படித்துச் சொல்லு வாள். அவள்கூட இன்று இங்கே வந்திருக்கிறாள்" என்றார்.
"கொஞ்ச நாள் இந்த ஊரில் தங்கிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். எங்கள் முதலாளி தங்களையும் பார்த்துவிட்டு வரச் சொன்னார். நான் 'ஹோட்டல் டைஜெஷ'னில் தங்கியிருக்கிறேன்..."
"நன்றாய்ச் சொன்னீர்கள்! ஹோட்டலிலா தங்குவது? நம் பங்களாவில் தங்குங்கள். ஒரு அசௌகரியமும் இராது. மிஸ்டர் சேகரன் கூட இருக்கிறார். உங்களுக்கு இவரைச் சென்னைப் பட்டணத்தில் தெரிந்திருக்கலாமே? உடனே போய்ப் பெட்டி படுக்கை களை எடுத்து வாருங்கள்!"
காமேசுவரய்யருடைய அழைப்பை அவன் மறுக்கவில்லை; எனினும், அவ்வளவாக அப்போது அதைப் பொருட்படுத்தவில்லை. சற்று நேரம் பேசிக்கொண்டுஇருந்துவிட்டுத் திரும்பி னான்.
வெளியே வரும்போது பங்களாவின் கேட்டுக்குச் சற்று ரத்தில் ஓர் இளைஞன் சைக்கிளில் பாய்ந்து வேக மாய்ச் சென்றதை அவன் கவனித்தான். அந்த இடத்தை அடைந்தபோது ஒரு பெண் மணி மறைந்துகொள்ள முயன்றதைக் கண்டான். அந்தப் பெண் மாலதிதான் என்று கண்டு திடுக்கிட் டான்.
'இந்த மாலதி யார்? அவள் எதற்கு இங்கே வந்தாள்? அந்த இளைஞன் யார்?' என்றெல்லாம் அவன் மனம் குழம்பிற்று. அன்றே தன் பெட்டி படுக்கைகளுடன் பங்களாவுக்கு வந்துவிடுவதென்று முடிவு செய்தான்.

## அத்தியாயம்-3



சுமார் ஐம்பது வயதான காமேசுவரய்யர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் மனைவியை இழந்திருந்தார். தோட்டக்காரன் கண் சாமியும், சமையற்காரன் நாராயணனுமே பங்களாவில் இருந்தார்கள். சென்னைப் பட்டணத்தில், அவருடைய காலஞ்சென்ற தமையனாரின் புதல்வன் கிருஷ்ணனையும் புதல்வி மாலதியையும் தம்முடன் வந்திருக்கும்படி அவர் அழைப்பதுண்டு. மாலதி ஒரொரு சமயங்களில் தன் சித்தப்பா வீட்டிற்கு வருகிறதும் வழக்கம்தான். எனினும், அவள் சகோதரன் கிருஷ்ணன் வந்து செல்வது அபூர்வமாகவே இருக்கும். அதற்குக் காரணம், காமேசுவரய்யருடைய சம்பாத்திய முறைகள் அவனுடைய பரந்த நோக்கத்துக்கு ஏற்றதாக இல்லா ததுதான். தோட்டக்காரக் கண் சாமிதான் சந்துருவுக்கு இத்தனை விவரங்களையும் சொன்னவன். மாலதி மணமாகாதவள் என்ற செய்தி சந்துருவின் உள்ளத்திலி ருந்து ஒரு பெரிய பாரத்தை நீக்கியது.

அன்று இரவு படுக்கப்போகும் போது மிஸ்டர் சேகரன் பொதுவாக, "ஊரில் திருட்டுஅதிகமாக இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ராத்திரி வேளையில் வாசல் கதவைத் திறக்கவேண்டியிருந்தால், வேறு யாருக்காவது தெரிவித்து விட்டுப் போகவேண்டும்" என்றார். அப்போது சந்துருவின் கண்கள் அவனையும் அறியாமல் மாலதியை நோக்கின. ஒருவிநாடிப் பொழுது அவள் கண்களில் சஞ்சலத்தின் சாயை தோன்றி மறைந்தது, அவன் திருஷ்டிக்குத் தப்பவில்லை.

எங்கேயோ கடியாரத்தில் ஒரு மணி அடித்தது. சந்துரு படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கவ னித்தான். மெதுவாக வாசற் கதவு திறக்கப்படுவது போன்ற சப்தம் கேட்டது. ஜன்னலைத் திறந்து வெளியே நோக்கினான். மங்கிய நிலவொளியில் மாலதி இறங்கி, நடையில் மெள்ளப் போவது தெரிந்தது. சந்துருவும் அரை நிமி ஷத்தில் பங்களாவுக்கு வெளியே வந்துவிட்டான். ஆனால், அவன் பத்தடி செல்வதற்குள் எதிரில் மாலதி

திரும்பி வந்தாள்.
சந்துருவுக்கு அந்தக் கணமே மறைந்துகொள்ள வேண்டிய நிர் பந்தம்! இந்த மர்மங்கள் ஒன்றும் விளங்காதவனாகத் தன் மறை விடத்திலிருந்து அவன் கிளம்பி வந்து பார்த்தபோது, வாசற் கதவு தா  போடப்பட்டிருந்தது!

## அத்தியாயம்: 4



பங்களாவைச் சுற்றிலும் இருந்த சிறு நந்தவனமும் வெண்மையான காம்பவுண்டுச் சுவரும் நிலவொளியில் பிரகாசமாகத் தோன்றின. உள்ளே  ழைய வாசற் கதவு இடம் கொடுக்கவில்லை என்று கண்ட சந்துரு, வராந்தாவிலிருந்து மெள்ள இறங் கிச் சுவரோரமாகவே தன் அறைக்கு நேரே வந்தான். வராந்தாவில் படுத்திருந்த தோட்டக்காரக் கண்  சாமியின் குறட்டையைத் தவிர எங்கும் நிசப்தமாகவே இருந்தது. சந்துரு தன் அறை ஜன்னலின் பக்கம் வந்ததும், வீட்டிற்குள் தடதடவென்று நடமாடுவது போன்ற அரவம் கேட்டுத் திடுக்கிட்டு நின்றான். தி  ரென்று காமேசுவரய்யரின் குரல், "திருடன்! திருடன்!" என்று எழுந்தது. அதே கணம் வாசற் கதவு வேகமாகத் திறந்த சப்தமும் கேட்டது.
வீட்டின் பக்கவாட்டில் சந்துரு இருந்ததால், வாசலில் நடப்பதுஎன்னவென்று அறிய முடியாமல் திகைத்தான். இந்தச் சமயத்தில் தன்னைத் தாண்டிக்கொண்டு யாரோ ஒருவன் புழக்கடைப் பக்கம் ஓடுவதைச் சந்துரு உணர்ந் தான். மறுகணம் சந்துரு அவனைத் துரத்திக் கொண்டிருந்தான்!
பங்களாவின் பின்புறத்தை அடைந்ததும் அந்த மனிதன் காம்பவுண்டுச் சுவரேறிக் குதிக்கும் தறுவாயில், சந்துரு அவனைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டான். மேகங்களிலிருந்து விடுபட்ட சந்திரனுடைய ஒளியில், தான் பிடித்த மனிதன், அன்று காலை மாலதியுடன் பேசிவிட்டு சைகிளில் சென்ற இளைஞன்தான் என்பது சந்துருவுக்கு உடனே விளங்கிற்று. அவன் ஒரு குரல் கொடுத்து வீட்டிலுள்ளவர்களை அழைக்கச் சித்தமாகும்போதே, புழக்கடைக் கதவு எதிர்பாராத விதமாகத் திறந்து கொண்டது. அளவற்ற ஆச்சரியம் அழகிய வதனத்தில் தோன்ற,

www.thamizhhere.blogspot.com

மாலதி அங்கே நின்றாள்!
"மிஸ்டர் சந்திரன்! அவனை விடுங்கள். அவன் நிரபராதி" என்றாள் மாலதி. சந்துரு சற்றுத் தயங்கினான். அவள் மீண்டும், "அவன் என் சகோதரன்!" என்றாள். சந்துருவுக்கு மனதிலிருந்து ஒரு பெரும் பாரம் நீங்கியது போல் பிரமை உண்டாகியது. பிடியைத் தளர்த்தினன். அடுத்த கணம் அந்த இளைஞன் தப்பித்துக்கொண்டான்! மாலதியின் கண்களில் நன்றி சுரந்தது. சந்துரு திரும்பி வந்தபோது காமேசுவர அய்யர், "ஐயோ! வைரக் கம்மல்கள் போய் விட்டனவே!" என்று அலறிக் கொண்டிருந்தார்.

## அத்தியாயம்: 5



பங்களாவின் உள் ஹாலில் எல்லாரும் கூடியிருந்தார்கள். முகத்தில் ஏக்கம் தோன்றக் காமே சுவரய்யர் நாற்காலியில் சாய்ந்திருந்தார். தாம் போலீஸ் உத்தி யோகஸ்தர் என்ற முறையில், சேகரன் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.
முதலில் சமையற்காரன், ''எனக்கு இருந்த அலுப்பிலே, திருடன் என் மேலே ஏறித் துவைத்திருந்தால் கூடத் தெரிந்திராது'' என்று கூறிவிட்டான். அடுத்தாற்போல் கண்        சாமி, ''நான் படுத்தேனுங்களா... உடனே என்னைத் துரத்து துரத்துனு துரத்திக்கிட்டே போயி...'' என்று ஆரம்பித்தான்.
''யார் அது அப்படித் துரத்தியது?''
''அதுதான் தெரியலீங்க. நான் கூரை மேலெல்லாம் ஓடி, பல மெல்லாம் போயி, களைத்துச் சாய்ஞ்சேனா...''
''இதெல்லாம் நிஜமாக நடந்ததா?''
''சொப்பனங்க, எசமான்! நிசமா நடந்திருந்தா, நான் இத்தினி நாளி உசிரோட இருந்திருப்பேனுங் களா?''

www.thamizhthenee.blogspot.com

மாலதி சிரித்து, "சொப்பனம் எல்லாம் போய் ஐயா கிட்டச் சொல்லலாமாடா?" என்று கேட்டாள்.
சேகரன் இடைமறித்து, "சொன் னவரைக்கும் சரிதான்! வேடிக்கையாக இருக்கிறது இவன் சொப்பனம்" என்றார்.
மாலதி உடனே தானாகவே, "நேற்று நான் ரயிலில் கண் விழித் துக்கொண்டு வந்த அசதியில் எனக்கு நல்ல ‌ க்கம். எல்லாரும் எழுந்த பிறகுதான் நான் கண் விழித்தேன்" என்றாள். அடுத்தபடி யாகச் சேகரன் தன்னை ஏதாவது கேட்பார் என்று சந்துரு ஆவலு டன் எதிர்பார்த்தான். ஆனால் அவர் ஒரு கேள்வியும் கேட்க வில்லை; அவன் பக்கம் கூடத் திரும்பவில்லை.
காமேசுவரய்யரைப் பார்த்து, "சரி, இருக்கட்டும்... இதை நான் கவனிக்கிறேன். உங்கள் கம்மல் களை வரவழைப்பது இனி என் பொறுப்பு. இப்போது எல்லாரும் படுக்கப் போங்கள். மணி இரண்டு ஆகிறது" என்றார்.
கண்களில் நன்றி ததும்பச் சந்துருவைப் பார்த்துவிட்டு மாலதி சென் றாள்.
சந்துரு தன் அறைக்குப் போய் ஒரு நிமிஷம்தான் ஆகியிருக்கும்... மெள்ளக் கதவைத் திறந்து கொண்டு சேகரன் வந்தார். "மிஸ்டர் சந்துரு! என்னிடம் இப்போது மறைக்காமல் சொல்லுங் கள். திருட்டு நடந்தபோது நீங்கள் ஏன் பங்களாவுக்கு வெளியில் இருந்தீர்கள்?" என்றார்.

## அத்தியாயம்: 6



சேகரனைப் பார்த்து முதலில் திடுக்கிட்டான் சந்துரு. பிறகு நிதானித்து, அவருக்குத் தன்னைப் பற்றி எவ்வளவு ‌ ரம் தெரியும் என்பதை அறிய எண்ணி, வெகு ஜாக்கிரதையாகவே பதில் சொன் னான்... "மிஸ்டர் சேகரன்! நான் திருட்டில் சம்பந்தப்பட்டவன் என்று நினைத்தால், அதை அப்போதே சொல்லியிருக்க லாமே?"
சேகரன் இந்தப் பதிலை எதிர் பாக்கவில்லை. ஆகவே, சிறிது தணிவான குரலில், "மிஸ்டர் சந்துரு! அப்படி நான் சந்தேகித் திருந்தால் உடனே

வெளிப்படுத்தி யிருப்பேன். 'திருடன்' என்ற குரல் கேட்டதும், நான்தான் முதலில் விழித்துக்கொண்டவன். உமது அறையைத் தாண்டி வந்தபோது, நீர் உள்ளே இல்லை!'' என்றார்.
சந்துருவுக்கு ஒரு விஷயம் நிச்சயமாயிற்று. சேகரன், மாலதி யைப் பற்றிய விஷயங்களைக் கவனித்திருக்க முடியாது என்பதே அது. அந்தத் தைரியத்துடன், ''மிஸ்டர் சேகரன்! நீங்கள் என் மீது வைக்கும் நம்பிக்கைக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருக் கிறேன். ஏதோ சப்தம் கேட்டது போல் இருந்தது; கதவும் திறந்திருக் கவே, நான் வெளியே போனேன். திரும்புவதற்குள் வீட்டிற்குள் கூக்குரல் எழும்பிவிட்டது. இதில் என்னாலான எந்த உதவியும் செய்யச் சித்தமாக இருக்கிறேன்'' என்றான்.
''அவ்வளவுதான் நான் வேண் டியதும்! சரி, மாலதியைப் பற்றி உமக்கு என்ன தெரியும்? சொல் லுங்கள்.''
''மாலதியைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவளுக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருப்பதாக யாராவது நினைத்தால், அது சுத்த...'' என்று ஆரம்பித்தான்.
''அவசரப்பட வேண்டாம், சந்துரு ஸார்! ஒருவர் அழகாக இருந்துவிட்டால் மட்டும் எதை யும் நம்புவதற்கில்லை. நீர் இனி என்னிடம் அவ்வப்போது உண்மையை மட்டும் சொல்லி வந் தால், என் வேலை லகுவாகும்'' என்று கூறிவிட்டுச் சென்றார் சேகரன்.
அவரது பேச்சு சிநேக பாவத் தில் இருந்ததெனினும், அவர் எதையோ மறைத்துப் பேசுகிறார் என்றும், எச்சரிக்கை செய்கிறார் என்றும் சந்துரு உணர்ந்தான். அதைப் பற்றி அவன் சிந்தித்துக் கொண்டிருந்தபோதே, மறுபடி அறைக் கதவு இரண்டாம் முறை யாகத் திறந்துகொள்ள, மாலதி பிரவேசித்தாள்.
மெல்லிய குரலில், ''எனக்கும் உங்களால் ஒரு காரியம் ஆக வேண்டும்!'' என்றாள்.
www.thamizhthenee.blogspot.com

## அத்தியாயம்:7



மாலதி சந்துருவிடம் அன்று என்னென்ன பேசினாள் என்று இப்போது கேட்டால் அவனுக்குச் சொல்லத் தெரியாது. அவன் முன் மகா ரூபவதியான ஒரு நாரீ மணி நிற்பதாக உணர்ந்தான். அவளுடைய காதுகளிலிருந்த வைரங்கள் ஜா வல்யமான வர்ண விசித்திரங்களை வாரிச் சொரிந்தன. ஆனால், அவைகூட அவளுடைய கண்களின் ஒளியில் மங்கி வெட்கித்தான் போயின. 'இந்த அழகுத் தெய்வம் ஒரு தகாத காரியத்தைச் செய்யச் சொன்னாலும் நாம் ஏன் செய்யக்கூடாது' என்று நினைத்தான்.

"மிஸ்டர் சந்துரு! உங்களிடம் சொல்லலாமென்று என்னவோ தோன்றுகிறது. நீங்கள் எனக்கு இந்த உதவி செய்வீர்களென்று என் உள்ளத்துக்குள் ஏதோ சொல் கிறது. நான் உங்களுக்கு எவ்வ ளவோ விஷயங்கள் சொல்ல வேண்டியிருந்தும், இப்போது அவைகளை விவரிக்கச் சந்தர்ப்பம் இல்லை. சில மணி நேரங்களுக்கு முன் திருட்டுப்போன வைரக் கம் மல்கள், இப்போது ராவ்சாகிப் கோபாலசாமி சர்மாவின் புத்திரர் மான் கோவிந்தனின் கோட்டுப் பையில் இருக்கின்றன. அவர் வீட்டை 'எக்ஸ்டென்ஷ'னில் லகுவாய்ப் பார்த்துக்கொள்ளலாம். அதைக் கொண்டு சேர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வீர் களா?" என்றாள் மாலதி.

"கோவிந்தனா! அட, என்னுடன் படித்தவனாயிற்றே அவன்!"

"ரொம்ப சௌகரியமாகப் போயிற்று! ஆனால் கம்மல் எப் படி அவனிடம் வந்ததென்றும், எனக்கு எப்படித் தெரியுமென்றும் இப்போது கேட்காதீர்கள் - தயவுசெய்து! எவ்வளவு நாசுக் காக அவைகளைக் கொண்டு வருகிறீர்களோ, அவ்வளவுக்கு நல்லது. உங்களை நம்பலாமா?" என்று

கேட்டாள் மாலதி.

மாலதி விடைபெற்றுப் போன போது, சந்துருவின் சம்மதத்துடனே சென்றாள். அவள் போன பிறகுதான், "ஏது! இந்தப் பெண்ணின் கட்டளை ரொம்பக் கடுமையாக இருக்கும் போலிருக்கிறதே!" என்று அவனுக்குக் கவலை பிடித் துக்கொண்டது. ஆனால் சரியாக ஏழாவது மணி, சந்துரு மேற்படி கோவிந்தனை அவன் வீட்டிலி ருந்து ரயில்வே ஸ்டேஷன் வரை பின்தொடர்ந்து கொண்டிருந் தான். எப்படிக் காரியத்தைச் சாதித்துக்கொள்வது என்று அறியாமல் ஸ்டேஷனில் அவன் கலங்கி நின்றபோது, எதிர்பாராத சம்பவம் ஒன்று நிக ந்தது.

## அத்தியாயம் 8



துரைசாமி என்கிற ஒரு பேர் வழி இந்த அத்தியாயத்தில் தோன்றி, இதிலேயே விடைபெற் றுக்கொள்கிறான். அவன் தொழி லுக்குக் கூட்டங்கள்தான் வசதி யாக இருக்கும். சட்டைப் பைக்குள் கைவிட்டு, உள்ளே இருப்பதை எடுக்க நெருக்கடிதானே வே ம்? இன்று அவன் பங்களூர் ரயில்வே பிளாட்பாரத்தில், எங் கேயோ பார்த்தபடி யோசனையில் ஆ ந்திருந்த கோவிந்தன் பையில் கைகளைப் போட்டான். கோவிந்தன் அதைக் கவனிக்கவில்லை; துரைசாமி தன் வெகுநாள்பட்ட அனுபவத்தின் பேரில், பரம லகு வாக அவன் பையிலிருந்த ஒரு சிறு நகைப் பெட்டியை எடுத்துக் கொண்டு நழுவினான்.

ஆனால், இப்போதுதான் அவன் துரதிருஷ்டம் சந்துருவின் மூலம் காத்திருந்தது. கோவிந்தனையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த சந்துரு இப்போது தன் காரியம் துரைசாமி மூலம் சுளுவாக நடைபெறுவதை உணர்ந்துகொண்டு, அடுத்த நிமிஷம்

அவனைப் பின்பற்றலா னான்.

தன் காரியம் முடிந்த பின்னர் அந்த ஸ்தலத்திலிருந்து சற்று வேகமாகவே வெளியேறிவிடுவது துரைசாமியின் வழக்கம். ஆகவே, அவன் ஸ்டேஷன் மாடிப் படி யைத் தாண்டிச் சென்ற பின்னரே சந்துருவால் பிடிக்க முடிந்தது. கழுத்தில் ஒரு கையைக் கொடுத் துக் கீழே தள்ளி, கையை ஒரு முறுக்கு முறுக்கி, "அடே! நீ இப்போ எடுத்ததைக் கொடுக்கி றாயா என்ன?" என்று உறுமினான் சந்துரு. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் துரைசாமி தனக்கு ஒன்றும் தெரியாதென்று சாதித்து விட்டு நழுவிவிடுவான். இன்று காலையிலிருந்து ஆகாரம் செய்யாததும், சந்துரு முறுக்கியதனால் ஏற்பட்ட வலியும் அவனைக் கோழையாக்கிவிட்டன.

"அட பாவி!" என்று மனதில் நினைத்துக்கொண்டு, துரைசாமி தான் களவாடியதைச் சந்துரு விடம் திருப்பிக் கொடுத்துவிட்டுத் துரிதமாக வெளியேறினான்.

இத்தனை நிக ச்சிகளையும் கண்கொட்டாமல் சற்றுத் ரத்திலிருந்து கவனித்து வந்த தோட் டக்கார கண் சாமி, "ஐயா! ஐயா!" என்று சந்துருவை நோக்கி வர ஆரம்பித்தான். ஆனால் கண் சாமி சந்துருவை நெருங்குவ தற்கு முன் ஒரு டிக்கெட் பரி சோதகர் அவனை வழிமறித்து நிறுத்திவிட்டார். இதையன்றும் அறியாத சந்துரு வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.

## அத்தியாயம் 9



"வெட்டிக்கொண்டு வா" என்றால் கட்டிக்கொண்டு வந்ததாக மாலதியிடம் காண்பித்துக்கொள்ள வேண்டும் என்பது சந்துருவின் விருப்பம். மேலும், நகையை அதன் இருப்பிடத்தில் சேர்ப் பதனால், தான் ஒரு பெரிய நல்ல காரி யம் செய்யப்போவதாகவும் அவனுக்குத் தோன்றிற்று. ஆகவே, வீட்டிற்குத் திரும் பியதும், நேரடியாக மாலதியைக்கூடப் பாராமல், காமேசுவரய்யரின் ஆபீஸ் அறைக்குள் ழைந்து, கம்மல்களை எங்கே வைத்தால் உடனே அவர் கண் ணில் படும் என்று கவனிக்கத் தொடங்கி னான். அவன் முடிவிற்கு வருவதற்குள் ளாக அறைக்குச் சமீபத்தில் பேச்சுக் குரல் கேட்டது. திடுக்கிட்ட சந்துரு ஜன்னலுக்கும் பீரோவுக்கும் இடையில் ஒளிந்துகொண்டான்.

அடுத்த கணம், அறைக்குள் காமேசுவரய்யர் ழைந்தார். அவருடன் ழைந்த கோவிந்தனைக் கண்டு சந்துரு ஸ்தம்பித்துப் போனான்.

"நீங்கள் அந்த மருங்காபுரம் மைனரிடம் அன்று ஆயிரம் ரூபாய் கிளப்பினீர்களே, சரியான வேலை! அந்த மடையனுக்கு நீங்கள் ஏமாற்றுகிறீர்கள் என்று கொஞ்சமாவது சந்தேகம் இருக்கவேண்டுமே!" என்று கூறி, கோவிந்தன் வாய் விட்டுச் சிரித்தான். காமேசுவ ரய்யரின் சம்பாத்திய முறை கள் மாலதியின் சகோதர னுக்குப் பிடிக்காமல் இருந்த காரணம் சந்துருவுக்கு இப் போதுதான் புரிந்தது.

கோவிந்தன் நான்கு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத் துக் காமேசுவரய்யரிடம் கொடுக்க, அவர் இரும்புப் பெட்டியிலிருந்து ஒரு பதக்கத்தை எடுத்து அவனிடம் தந்தார். தரும்போதே, "நல்ல வேளை, மிஸ்டர் கோவிந்தன்! உங்கள் பதக்கம் பிழைத்தது. நேற்று நம்ம வீட்டில் ஒரு களவு நடந்தது. மிஸ்டர் சேகரன் வந்திருக்கிறதனால் இன்னும் நான் அதைப் போலீஸிலே தெரிவிக்கவில்லை. சேகரனை உங்களுக்குத் தெரியுமோல்லியோ?" என்றார்.

அதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்த சேகரன், "திருட்டைப் பற்றித் தானே பேசிக்கொண்டிருக்கி றீர்கள்? அதை எடுத்த ஆசா மியை வெளிப்படுத்தத்தான் நானே இப்போது இங்கே வந் தேன்.

www.thamizhthenee.blogspot.com

அவனிடமே கேட்டு உங்கள் பண்டத்தை வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறி, பீரோவின் பின்னால் கம்மல் களைக் கையில் வைத்தபடி ஒளிந்திருந்த சந்துருவை வெளியே இழுத்தார்.

## அத்தியாயம்: 10



எதிர்பாராதவிதமாக அம்ப லத்தில் இழுத்து நிறுத்தப்பட்ட சந்துரு திகைத்துப் போனான். கையில் இருந்ததோ களவு போன பொருள்; அவன் இருந்த இடமோ, களவு நடந்த இடம். இந்த நிலை மையில் சமாளித்துக்கொள்ள வழி ஒன்றும் இருப்பதாகவே அவனுக்குப் புலப்படவில்லை.

கோவிந்தன் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "அட, சந்துருவா! நீ எதற்கடா இப்படி ஆரம்பித்தாய்? நல்ல பைய னாக இருந்தாயே?" என்றான் ஏளனமாக.

சந்துருவுக்குக் கோபம் பொத் துக்கொண்டு வந்தது. காமேசுவ ரய்யர் பக்கம் உக்ரமாகத் திரும்பி, "ஸார்! உங்களுக்கு உண்மையில் யார் திருடன் என்று தெரியவேண் டுமென்றால், இவனைக் கேளுங் கள்!" என்று கோவிந்தனைச் சுட்டிக்காட்டினான்.

"ஓகோ! பேஷாப் போச்சு நாடகம்! நன்றாய் நடிக்கிறான், ஸார்!" என்றான் கோவிந்தன்.

"நான் சொல்லுகிறேன்... இன்று காலையில் இந்த நகை இவன் சட்டைப் பையில் இருந்தது. இது உண்மை!"

"சரி, மிஸ்டர் அரிச்சந்திரரே! அது அங்கே இருந்தது உமக்கெப்படித் தெரியும்?" என்று சேகரன் உத்தியோக தோரணையில் குறுக்கிட்டார்.

பளிச்சென்று பதில் சொல்ல யத்தனித்தான் சந்துரு. ஆனால், கலங்கிப் பயம் தோன்றும் முகத்துடன் நிற்கும் மாலதியை அவன் கண்டான். தான் பதில் சொல்வதானால், மாலதியின் பெயரையும் சம்பந்தப்படுத்த வேண்டியிருக்கும் என்பது நினைவுக்கு வந்தது.


சந்துருவின் தயக்கத்தைக் கண் ற்ற கோவிந்தன், "அப்படிக் கேளுங்கள், ஸார்! அதைச் சொல்லட்டும்!" என்று கொம்மாளம் அடித்தான். பிறகு, "நான் வருகிறேன், ஸார்! காலம்பற நல்ல தமாஷ்!" என்று வாசற்பக்கம் திரும்பினான்.

சந்துரு ஓர் உறுமலுடன் கோவிந்தன் மீது பாயத் தயாரானான். "மரியாதையாக உன் திருட்டை ஒப்புக்கொண்டு விடு! நழுவப் பார்க்காதே!" என்று அவனைச் சேகரன் பிடித்து நிறுத்திக்கொண்டார்.

மாலதி நரக வேதனைப் பட்டுக்கொண்டிருந்தாள். நழுவிக் கொண்டிருக்கும் கோவிந்தனைத் தடுப்பதா..? காமேசுவரய்யரிடம் சந்துரு நிரபராதி என்று சொல் வதா..? கைகளைப் பிசைந்து உள்ளேயும் வெளியேயும் பார்த் துக்கொண்டு ஒன்றும் தோன்றா மல் துடியாய்த் துடித்தாள்.

www.tamilthenee.blogspot.com

## அத்தியாயம் 11



டிக்கெட் பரிசோதகரால் ஸ்டேஷனில் தடுத்து நிறுத்தப்பட்ட கண் சாமி முன்னும் போக முடி யாமல் பின்னும் போக மாட்டாமல் அவதிப்பட்டான். "என்னப்பா சேதி? டிக்கெட் இருக்குதா?" என்றார் பரிசோதகர்.

"அது இருந்தா, நீ இத்தினி நாளி என்னைப் பிடிச்சிருக்க முடி யுமா?"

"ஓஹோ! உன் மாமன் ஊட்டு ரயிலோ! எப்படி நீ ழைஞ்சே? நான் பார்க்கவே இல்லையே?"

"அதனாலேதான் ளைஞ் சேன்!"

பரிசோதகருக்குக் கோபம் வந்துவிட்டது. கண் சாமியைக் 'கல்தா' கொடுத்து ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குத் தள்ளிக் கொண்டு போனார். ஸ்டேஷன் மாஸ்டர் நிமிர்ந்து பார்த்து, "யாரப்பா நீ?" என்றார்.

"இருங்க, சொல்றேன். கையிலே வலி!" என்றான் கண் சாமி.

"ஏன் அப்படி?" - ஸ்டேஷன் மாஸ்டருக்கு இவன் வேடிக்கை ஆசாமி, 'கோட்டா' பண்ணலாம் என்று தோன்றியது. பரிசோத கரைப் பேச வேண்டாமென்று சமிக்ஞை செய்தார்.

"உங்க கையை இந்த முரடன் முறுக்கின மாதிரி முறுக்கினா, வலிக்காம என்ன செய்யும்?"

www.thamizhthenee.blogspot.com

"சரி, ரயில்வே கம்பெனிக் காரங்களைவிட்டு உன்னிடம் மன்னிப்புக் கேக்கச் சொல்றேன். நீ எங்கே வந்தே?"

"வண்டியிலே தாயாரு வர்ராங்க. அதுக்காக..!"

"எங்கேருந்து வர்ராங்க?"

"இந்த ரயிலு எங்கேருந்து வருதோ, அங்கேருந்து!"

"இவன் பெரிய போக்கிரி; உதைக்க ம், ஸார்!" என்றார் பரிசோதகர்.

"டிக்கெட் இல்லாமல் உள்ளே வரக்கூடாதென்று உனக்குத் தெரியாதாடா?"

"சரிதானுங்க, இப்போ வந் துட்டேன்! என்னைத் க்கிலே போடுங்க!"

"அப்புறம்..?"

"அப்புறம் கழுவிலே ஏத்துங்க! சும்மா கேள்வி கேக்காதீங்க!"

சுமார் அரை மணிக்கெல்லாம் இடுப்பில் ஓர் உதையுடன் வெளி யேறிய கண் சாமி, பங்களாவை அ கியபோது, எதிரில் கோவிந் தன் வருவதைக் கண்டான். அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தில், கோவிந்தனின் கையைப் பற்றிக் கொண்டு இழுத்துப்போய் பங்க ளாவுக்குள் திரும்பவும் கொண்டு சேர்த்தான்.

www.thamizhthenee.blogspot.com

## அத்தியாயம்-12



தர்ம சங்கடமான நிலைமையில் காமேசுவரய்யர், உத்யோக தோர ணையில் சேகரன், கோபத்தில் துடிக்கும் சந்துரு, மனோவேதனை தாங்கமுடியாமல் தவிக்கும் மாலதி - இவர்கள் முன்னிலையில்தான் மீண்டும் ஒரு முறை கோவிந்தன் வந்து நின்றான்; அல்லது, நிறுத்தப்பட் டான். கண் சாமிக்கு உற்சாகம் கரை புரண்டு போயிருந்தது. அவன் சந்துருவைப் பார்த்து, "சாமி... சாமி! நீங்க திருடன் கையிலிருந்து பிடுங்கின நகை இவருதுங்க! கொடுத்துட் ங்களா?" என்றான். அப்புறம்தான் அவன் ஒவ்வொருவர் முகத்தையும் கவனிக்கலானான். ஏதோ விபரீதமாக நடந்திருக்க வேண்டுமென்று அவன் கட்டை மூளையில்கூட அப்போது உதயமாகியிருக்கவேண்டும். மாலதிக் குப் பளிச்சென்று உண்மை விளங்கி விட்டது. சந்துருவை விடுவிக்க இதோ ஒரு சந்தர்ப்பம் வந்துவிட்டது என்பதை அவள் உணர்ந்து, "கண் சாமி! நடந்த விஷயத்தை விளக்க மாகச் சொல்!" என்றாள்.

கண் சாமி விஸ்தாரமாகவும் ஆதியோடந்தமாகவும் விவரங்களை வெளியிட்டு வந்தபோது, கோவிந்தன் முகத்தில் களை மாறிக்கொண்டே வந்தது; சேகரன் பிடி மெள்ள மெள் ளச் சந்துருவிடமிருந்து நழுவத் தொடங்கியது. இப்போது கோவிந்தன் காமேசுவரய்யர் பக்கம் நகர்ந்து, "மருங்காபுரம் மைனர் விஷயம் ஞாபகமிருக்கட்டும். என்னைச் சீக்கிரம் அனுப்புங்கள்" என்று எச்சரித்ததும், அவர் முகத்தில் கவலை படர்ந்ததும் யாருக்கும் தெரியாது.

www.tamilthenee.blogspot.com

கோவிந்தனை நோக்கி நகர்ந்த சேகரனைச் சட்டென்று காமேசுவரய்யர் எதிர்பாராதவிதமாக நிறுத்தி, "வேண்டாம், சேகர்! அவனை ஒன்றும் செய்யவேண்டாம். நான் பேசிக் கொள்கிறேன் அவனிடம்!" என்றார் பரபரப்புடன். உடனேயே காமேசுவரய்யரும் கோவிந்தனைப் பின்தொடர்ந்து வேகமாக வெளியே சென்றார். சேகரன் ஒன்றும் விளங்கா தவராகக் கண் சாமியை மறுபடி விசாரணை செய்ய வெளியே அழைத்துச் சென்றார்.

அறையில் மாலதியும் சந்துருவும் தனியே இருந்தபோது, ஒரு புது ஆசாமி அங்கே வந்து சேர்ந்துகொண் டான். அவனைப் பார்த்தவுடனேயே சந்துருவுக்கு அடையாளம் புரிந்து விட்டது. முதல் நாள் இரவு சந்துரு விடமிருந்து தப்பித்துச் சென்ற மாலதியின் சகோதரன், கிருஷ்ணனே தான் அவன்!

## அத்தியாயம்-13



சந்துருவுக்கு விஷயங்கள் விளங்க அதிக நேரம் பிடிக்க வில்லை. கிருஷ்ணனும் மாலதியும் வெளியிட்ட விவரங்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தி, அவன் இதுவரை புரிந்துகொள்ளாத மர்மங்களை விளங்கவைத்தபோது அவன் பிரமித்தே போனான்.

காமேசுவர அய்யருடைய பங்களாவில் நடந்த சம்பவங்களுக்கு ஆதி காரணமானவள் லக்ஷ்மி என்ற பெண்மணி; அதை நடத்தி வைத்தவள் மாலதி. மாலதியின் மீது சந்துரு எவ்வளவு பாசம் கொண்டுவிட்டானோ, அவ்வளவு அந்த லக்ஷ்மியின் மீது

www.thamizhbooks.blogspot.com

கிருஷ்ணன் பிரேமை வைத்திருந்தான். கிருஷ்ணனுடைய விசாலமான நெற்றியையும் கூர்மையான கண்களையும் கவனித்த சந்துரு, அவன் வைத்த அன்புக்கு லக்ஷ்மி நிச்சயம் பாத்திரமுள்ளவளாக இருக்கவேண்டும் என்று ஊகித்தான்.

அந்த லக்ஷ்மியின் சகோதரன் தான் கோவிந்தன் - சந்துருவின் பள்ளித் தோழன். கோவிந்தனு டைய கெட்ட பழக்கங்கள் காலே நாட்களையும் தாண்டித் தொடர்ந்தன. தாட்டத்தில் தோற்று, கடன் அடைக்க வழியின்றி, தற்கால சாந்தியாக லக்ஷ்மியின் வைரப் பதக்கத்தில் அவன் கை வைத்துவிட்டான்.

இதைப் பின்னர் தெரிந்துகொண்ட லக்ஷ்மி, தன் சகோதரனைக் கேட்டதுமன்றி, கிருஷ்ணனுக்கும் கடிதம் போட்டு, அதைத் திரும்பப் பெற ஏற்பாடு செய்தாள். மேற்படி நகையை கோவிந்தன் காமேசுவரய்யரிடம் அடகு வைத்திருந்த செய்தியை அறிந்துகொண்ட கிருஷ்ணன் தன் தங்கை மாலதியை, உடனே 400 ரூபாயுடன் பங்களூருக்கு வரும்படி எழுதியிருந் தான். அவள் வரும்போதுதான் சந்துரு அவளை ரயிலில் சந்தித்தது. அந்தப் பணத்தைக் கோவிந்தனிடம் கொடுத்து, நகையை நேர் வழியில் மீட்டுக் கொள்ளலாம் என்பது அவன் கருத்து. ஆனால், கோவிந்தன் வேறு லகுவான வழியைக் கைப்பற்றினான்; மூன்று நான்கு நாளாக, காமேசுவரய்யர் இரும்புப் பெட்டியைத் திறக்கப் பிரயத்தனம் செய்து வந்தான். கல வரம் அடைந்த காமேசுவரய்யர், சேகரனைத் துணைக்கு அழைத்தார். பங்களூருக்கு மாலதி வந்தவுடன், கிருஷ்ணன் அவளை ரகசியமாகச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது சந்துரு வந்துவிடவே, கிருஷ்ணன் அவளை மறுபடி இரவில் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு சைக்கி ளில் ஏறி வேகமாக வெளியேறினான்; இதுவே சந்துருவின் மனதில் சஞ்சலத்தை உண்டாக்கி, பங்களாவுக்கு வருமாறு ண்டிற்று.

அன்று இரவில், மாலதி கிருஷ்ணனிடம் 400 ரூபாயைக் கொடுக்கச் சென்றபோதுதான், சந்துரு பின்னால் வந்து ஒளிந்துகொண்டான். திறந்த கதவை உபயோகித்துக்கொண்டு, கோவிந்தன் பங்களாவில் ழைந்து, அவசரத்தில் தான் எடுக்க வந்ததற்கு மாறாக வேறு ஒன்றைக் கொண்டு போய்விட்டான். அதையும் ஸ்டேஷ னில்

www.tamilthenee.blogspot.com

திருடன் எடுக்க, சந்துரு அதைக் கைப் பற்றிக் கொண்டான்.

இதெல்லாம் அறியாத கிருஷ்ணன், தனது 400 ரூபாயைக் கோவிந்தனிடம் கொடுக்க, அவன் அதைக் கொண்டு தனது சகோதரியின் நகையைக் காமேசுவரய்யரிடமிருந்து மீட்டுக் கொண்டு திரும்பினான். ஆனால், அவன் எதிர்பாராத விதமாகக் கண்       சாமி முளைத்து, காரியத்தைக் கெடுத்துவிட்டான்.

இவ்வளவு விவரங்களையும் சந்துரு, மாலதி யிடமிருந்தும் கிருஷ்ணனிடமிருந்தும் தெரிந்து கொண்டான்.

## அத்தியாயம்-14

மனோகரமான மாலை வேளை. பங்களாவுக்கு வெளியில் நந்தவனத்திலிருந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்து சந்துருவும் மாலதியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.



"பெரிய பெரிய உண்மைகள் ஒரே விநாடியில் வெளிப்பட்டுவிடுகின்றன" என்றான் சந்துரு திடுதிப் பென்று.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே?"

"மூன்று நாளைக்கு முன், நாம் உலகத்தில் இருப்பதாகக்கூட ஒருவருக்கொருவர் தெரியாது. இன்று உங்களை 23 வருஷமாகத் தெரிந்து கொண்டாற்போல் எனக்குத் தோன்றுகிறது!"

"அப்...பா...டா! நீங்கள் பெரிய கதையாக ஏதோ சொல்லப்போகி றீர்கள் என்று நினைத்து பயந்து விட்டேன்!" என்றாள் மாலதி. அவளுடைய வெண்கலச் சிரிப் பைச் சந்துரு ஆனந்தமாக அனு பவித்தான்.

"கதைதானே! அதுவும் ஒன்று சொல்லுகிறேன். ஆனால், அது நிஜமாக நடக்கும் கதையாக இருக்கும். என் சிநேகிதன் ஒருவன் இருக்கிறான். நல்ல யுவன். அவன் ரொம்ப அழகுமில்லை; பணக்காரனுமில்லை. சுமாராக கெட்டிக்காரன். ஆனால், ரொம்ப நல்ல மாதிரி. இவன் ஒரு பெண் ணைப் போய்ப் பார்த்தான்..."

"ஐயய்யோ! அப்புறம் அவருக்கு என்ன ஆச்சு..?"

"பயப்படாதீர்கள்! அந்தப் பெண் எப்பேர்ப்பட்டவள் தெரியுமா..? அழகில் ரதி; குணத்தில் தங்கம்; கல்வியில் சாக்ஷ£த் சரஸ்வதி. இவர்கள் இருவரையும் கடவுள் இரண்டு நாள் சேர்த்து வைத்தார். அந்த இரண்டு நாளும் அந்த யுவனுக்குத் தலை-கால் புரியவில்லை. இப்போது சொல்லுங்கள், அவன் என்ன செய்ய வேண்டும்?"

"எனக்கு விளங்கச் சொல்லுங்கள். அவன் என்ன செய்ய விரும்புகிறான்? அது தெரிந்தால் தானே..."

"வந்துவிட்டேன்... அந்த யுவதி அவனைவிட எல்லா விதத்திலும் மேலானவள். அவளுடைய காரி யார்த்தமாக அவனுடன் அவள் இரண்டு நாள் பழகினாள்; அதோடு நிறுத்திக்கொண்டாள். அவனுக்கு மேலும் அவளுடன் பழக வேண்டும், கூடவே இருக்க வேண்டும் என்று ஆசை பிறந்து விட்டது. யுவனை யுவதி கல்யா ணம் பண்ணிக்கொண்டால், அதனால் யுவதிக்குத்தான் சற்றுக் குறைவு. அவள் அந்தக் குறைவுக்கு மனதார உட்படுவாளா?"

"இவ்வளவுதானா? அதற்காகத்தான் அவள் காத்துக்கிடக்கிறாள் என்பது அந்த அசட்டு யுவனுக்குத் தெரியவில்லையே!" என்றாள்

www.thamizhthenee.blogspot.com

மாலதி பளிச்சென்று.

இருவருடைய சிரிப்பும் கலந்து எழுந்ததை, வெகு ரத்திலிருந்து கிருஷ்ணன் புன்னகையுடன் கவனித்தான்.

-(முற்றிற்று)

www.thamizhthenee.blogspot.com